# AKILA PRESS RELEASE

# 2022-2023

திங்கள்கிழமை
6 ஜூன் 2022

# கல்லூரி வளாக நேர்காணல்: 310 மாணவிகளுக்கு பணி ஆணை



வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வளாக நேர்காணலில் பணி ஆணை பெற்ற மாணவிகள்.

**வந்தவாசி, ஜூன் 5:** வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்ற வளாக நேர்காணலில் 310 மாணவிகள் பணி ஆணை பெற்றனர்.

இதில் சென்னை பேங்க் ஷோன், ஆல்டிரைஸ்ட், லென்ஸ்கார்ட், டெக் மகேந்திரா ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகள் நேர்காணலை நடத்தினர். இந்த நேர்காணலில் கல்லூரியின் இளநிலை, முதுநிலை இறுதியாண்டு மாணவிகள் பங்கேற்றனர். இதில் பேங்க் ஷோன் நிறுவனத்துக்கு 203 பேரும், ஆல்டிரைஸ்ட் நிறுவனத்துக்கு 25 பேரும், லென்ஸ்கார்ட் நிறுவனத்துக்கு 38 பேரும், டெக் மகேந்திரா நிறுவனத்துக்கு 44 பேரும் என மொத்தம் 310 மாணவிகள் வேலை பெற தேர்வு பெற்றனர்.

இதையடுத்து இவர்களுக்கு பணி நியமன ஆணைகளை கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம், முதல்வர் எஸ்.ருக்மணி, செயலர் எம்.ரமணன் ஆகியோர் முன்னிலையில் அந்தந்த நிறுவன அதிகாரிகள் வழங்கினர். கல்லூரி வேலைவாய்ப்பு அலுவலர் கே.வான்மதிச் செல்வி நன்றி கூறினார்.

• சென்னை
ன்,ஜூன் 8, 2022 | தினசெய்தி

# வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் 310 மாணவிகளுக்கு பணிநியமன ஆணை



வந்தவாசி,ஜூன்.8-
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசிஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் சென்னையை சேர்ந்த தனியார் நிறுவனங்கள் கல்லூரி வளாகத்தில் நேரடி வேலை வாய்ப்பிற்கான நேர்முகத் தேர்வு நடத்தினர்.

தனியார் நிறுவனங்களின் வேலைவாய்ப்பு அலுவலர்கள் கல்லூரியில் பயிலும் இளநிலை மூன்றாம் ஆண்டு மாணவிகளுக்கும்,முதுநிலை இரண்டாம் ஆண்டு மாணவிகளுக்கும் நேர்முகத் தேர்வினை நடத்தினர்.4தனியார் நிறுவனங்கள் நடத்திய இந்த நேர்முக தேர்வில் 310 மாணவிகள் தேர்வு பெற்றனர்.கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம், கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி, கல்லூரி செயலாளர் எம்.ரமணன் ஆகியோர் முன்னிலையில் அந்தந்த தனியார் நிறுவனங்களின் வேலைவாய்ப்பு அலுவலர்கள் பணி நியமன ஆணைகளை தேர்வு பெற்ற மாணவிகளுக்கு வழங்கினர்.நேர்முகத் தேர்வினை கல்லூரியின் வேலை வாய்ப்பிற்கான அலுவலர் முனைவர் கே.வான்மதி செல்வி ஒருங்கிணைத்தார்.

ஞாயிற்றுக்கிழமை
12 ஜூன் 2022

தினமணி.

# கல்லூரி மாணவிகள் மிதிவண்டிப் பேரணி

வந்தவாசி, ஜூன் 11: உலக மிதிவண்டி தினத்தை யொட்டி, வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி மாணவிகள் வெள்ளிக்கிழமை மிதிவண்டிப் பேரணி நடத்தினர்.

கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் நடைபெற்ற இந்தப் பேரணிக்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் எம்.ரமணன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி கொடியசைத்து பேரணியை தொடக்கிவைத்தார்.



மிதிவண்டிப் பேரணியை கொடியசைத்து தொடக்கி வைக்கிறார் கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி.

கல்லூரியிலிருந்து புறப்பட்ட பேரணி நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்றது. கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் டி.பாரதி, ஏ.கலைவாணி மற்றும் மாணவிகள் பங்கேற்றனர்.

தினகரன்

6.6.2022

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில்

# 310 மாணவிகளுக்கு பணி நியமன ஆணை



வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில், தனியார் கம்பெனிகளின் நேர்முகத்தேர்வில் தேர்ச்சி அடைந்து பணி நியமன ஆணை பெற்ற மாணவிகள்.

வந்தவாசி, ஜூன் 6: வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியை சேர்ந்த 310 மாணவிகள், தனியார் கம்பெனியில் வேலையில் சேர்வதற்கான பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

சென்னையில் இயங்கி வரும் தனியார் நிறுவனங்களில் வேலையில் சேர்வதற்கான நேரடி வேலை வாய்ப்பு நேர்முகத்தேர்வு முகாம், கடந்த வாரம் வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடந்தது. இதில், தேர்வு பெற்றவர்களுக்கான பணி நியமன உத்தரவு வழங்கும் விழா நேற்று முன்தினம் கல்லூரி வளாகத்தில் நடந்தது.

கல்லூரி முதல்வர் சி.ருக்மணி தலைமை தாங்கினார். கல்லூரி நிறுவனர் பா.முனிரத்தினம், செயலாளர் எம்.ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி வேலைவாய்ப்புக்கான அலுவலர் செல்வி வரவேற்றார்.

இதில், சென்னையை சேர்ந்த பேங்க் ஜோன் நிறுவனத்திற்கு 203 மாணவிகள், ஆல் டிரஸ்ட் நிறுவனத்திற்கு 25 மாணவிகள், டெக் மகேந்திரா நிறுவனத்திற்கு 44 மாணவிகள் உட்பட தேர்ச்சி அடைந்த 310 மாணவிகளுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. முடிவில் கல்லூரி வேலைவாய்ப்பு அலுவலர் செல்வகுமார் நன்றி கூறினார்.

# தமிழ் சுடர்

வியாழக்கிழமை, ஜூன் 16. 2022


## வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் விளையாட்டு தின விழா




வந்தவாசி, ஜூன்.16

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் 27வது ஆண்டின் விளையாட்டு தினவிழா கல்லூரியின் கலை அரங்கத்தில் சிறப்புற நடைபெற்றது. இவ்விழாவிற்கு கல்லூரி நிறுவனர் முனிரத்தினம் மற்றும் கல்லூரிசெயலர் ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் முனைவர் ருக்மணி அவர்கள் தலைமை தாங்கி தலைமையுரையாற்றினார். நுண்ணுயிரியல்துறைதலைவி முனைவர் ஜெகதி வரவேற்புரை வழங்கினார். உடற்கல்வி துறை இயக்குநர் ஜெசிமாலா ஆண்டறிக்கையை வாசித்தார்.

சிறப்பு விருந்தினராக வந்தவாசி தெற்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் பிரகாஷ் அவர்கள் கலந்து கொண்டு விளையாட்டின் முக்கியத்துவத்தையும் சிறப்புகளை எடுத்துரைத்து மாணவிகள் கல்வி கற்பதோடு மட்டுமல்லாமல் விளையாட்டிலும் சிறந்து விளங்க வேண்டும் என்று சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிப்பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. நிறைவாக ஆங்கிலத்துறை உதவிப் பேராசிரியர் நித்தியகுமார் அவர்கள் நன்றி தெரிவித்தார். காவலர் பிரகாஷ் அவர்களும் உடன் கலந்துகொண்டார்.

தமிழ் சுடர்

புதன்கிழமை, ஜூன் 15. 2022

# வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் விழா




வந்தவாசி, ஜூன்.15

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் 27வது ஆண்டின் முத்தமிழ் விழா கல்லூரியின் அரங்கத்தில் சிறப்புற நடைபெற்றது. இவ்விழாவிற்கு கல்லூரி நிறுவனர் முனிரத் தினம் மற்றும் கல்லூரி செயலர் ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் முனைவர் ருக்மணி தலைமை தாங்கி தலைமையுரையாற்றினார். தமிழ்துறை உதவிப் பேராசிரியர் கிருஷ்ணகுமாரி வரவேற்புரை வழங்கினார். தமிழ்துறை தலைவி ஞானமலர் ஆண்டறிக்கையை வாசித்தார். தமிழ்துறை உதவிப் பேராசிரியர் கலைவாணி சிறப்புவிருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார்.

சிறப்பு விருந்தினராக தன்முனைப்பு பேச்சாளர், பயிற்சியாளர், ஊடகவித்தகர், விஜய் டி.வி. புகழ், சொல்லின் செல்வர் மணிகன்டன் கலந்து கொண்டு தமிழ் மொழியின் சிறப்புகளை எடுத்துரைத்து மாணவிகள் கல்வியின் வழியாகவே வெற்றி பெற முடியும் என்றும், தாய்தந்தையரை போற்றி நல்வழியில் நடக்க வேண்டும் என்றும் ஒழுக்கமே சிறந்த பண்பு என்றும் பலவித நல்கருத்துக்களை மாணவிகளுக்கு எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. நிறைவாக தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் த.சௌந்தரலட்சுமி நன்றி தெரிவித்தார். தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் எழிலரசி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

மாலை முரசு

18-06-2022

"There Will never be a new world until women are part of it" - Alice Paul

# SRI AKILANDESWARI WOMEN'S COLLEGE, WANDIWASH

(Re-Accredited with 'A' Grade By NAAC)

(Recognised Under Section 2 (f) & 12 (B) of UGC Act.)

(Permanent Affiliation Granted by Thiruvalluvar University-Vellore)

Tindivanam Higway, WANDIWASH-604 408.T.V.Malai Dt.,

We the Management, Principal, Staff and Students take pleasure in inviting you on the occasion of the

## 21st GRADUATION DAY

on 19th June 2022 (Sunday) at 11.00 am/Venue:College Campus

Chief Guest

Padmashri Dr.MYLSWAMY ANNADURAI

Indian Scientist

Chairman-Board of Governors- National Design and Research Forum-Bengaluru Vice President-Tamil Nadu State Council For Science and Technology-Chennai



has graciously consented to deliver the convocation address and distribute the degree cerificates.

in th presence of

**Ln.Thiru.B.Munirathinam**

Founder and Chairman-SAEWC-Wandiwash)

**Ln.Thiru.M.RAMANAN**

Secretary

Former-Syndicate Member,

Thiruvalluvar University-Vellore

**Dr.S.RUKMANI**

Principal

ALL ARE CORDIALLY INVITED

SWAMY ABEDHANANDHA EDUCATIONAL TRUST,WANDIWASH

குறிப்பு: 2022-23 ஆம் கல்வி ஆண்டிற்கான மாணவிகள் சேர்க்கை நடைபெறுகிறது. சேர்க்கைக்கு நேரில் வரவும்

● சென்னை
வியாழன், ஜூன் 16, 2022 | தினச்செய்தி

வந்தவாசி

# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் முத்தமிழ் விழா




வந்தவாசி, ஜூன்.16-

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் 27ஆம் ஆண்டிற்கான முத்தமிழ் விழா கல்லூரி அரங்கில் நடந்தது. விழாவிற்கு கல்லூரி தலைவர் பி.முனிரத்தினம் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி, கல்லூரி செயலாளர் எம்.ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி தமிழ்த் துறை உதவிப் பேராசிரியை ச.கிருஷ்ணகுமாரி வரவேற்று பேசினார். தமிழ்த்துறை தலைவி மா.ஞானமலர் ஆண்டறிக்கை வாசித்தார். உதவிப்பேராசிரியை கலைவாணி சிறப்பு அழைப்பாளரை அறிமுகம் செய்து வைத்து பேசினார்.

விஜய் டி.வி.புகழ் தன் முனைப்பு பயிற்சியாளர் மற்றும் பேச்சாளர் பி.மணி கண்டன் விழாவில் கலந்து கொண்டு தமிழ் மொழியின் சிறப்புகளை விளக்கினார். மாணவி களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியை உதவிப்பேராசிரியை இ.எழிலரசி தொகுத்து வழங்கினார். முடிவில் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியை த.சௌந்தரலட்சுமி நன்றி கூறினார்.

மாலை முரசு

17-06-2022




வந்தவாசி கல்லூரி விழாவில் பயிற்சியாளர் மணிகண்டன் மாணவர்களுக்கு பரிசு வழங்கிய போது எடுத்த படம். அருகில் கல்லூரி நிறுவனர் முனிரத்தினம், செயலாளர் ரமணன், முதல்வர் ருக்மணி மற்றும் பலர் உள்ளனர்.

தினகரன்

18.6.2022

## வந்தவாசி அகிலாண்டேஸ்வரி

# கல்லூரி தினவிழாவில் மாணவிகளுக்கு பரிசு

வந்தவாசி, ஜூன் 18: வந்தவாசி அகிலாண்டேஸ்வரி கல்லூரி தினவிழாவில் மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்டது.

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் 27ம் ஆண்டு கல்லூரி தின விழா நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடந்தது. கல்லூரி முதல்வர் எஸ்.ருக்குமணி தலைமை தாங்கினார். நிறுவனர் பா.முனிரத்தினம், செயலாளர் எம்.ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பேராசிரியை கே.வடிவழகி வரவேற்றார்.




வந்தவாசி அகிலாண்டேஸ்வரி கல்லூரியின் 27ம் ஆண்டு கல்லூரி தின விழாவில் மாணவி ஒருவருக்கு முன்னாள் முதல்வர் எஸ்.மைதிலி சான்றிதழ் வழங்கினார்.

இதில் நாட்டு நலப் பணி திட்டம், லியோ சங்கம், இளம் செஞ்சுருள் சங்கம், அரிமா சங்கம் உள்ளிட்ட பல்வேறு சங்கங்களை சேர்ந்த ஒருங்கிணைப்பாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி கல்லூரி முன்னாள் முதல்வர் எஸ்.மைதிலி பேசினார். முடிவில், உதவி பேராசிரியர் வரலட்சுமி நன்றி கூறினார்.

மாலை முரசு

17-06-2022




வந்தவாசி கல்லூரி விழாவில் பயிற்சியாளர் மணிகண்டன் மாணவர்களுக்கு பரிசு வழங்கிய போது எடுத்த படம். அருகில் கல்லூரி நிறுவனர் முனிரத்தினம், செயலாளர் ரமணன், முதல்வர் ருக்மணி மற்றும் பலர் உள்ளனர்.

தினத்தந்தி

20–6–2022




வந்தவாசி

# அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் பட்டமளிப்பு விழா

## இஸ்ரோ முன்னாள் திட்ட இயக்குனர் மயில்சாமி அண்ணாதுரை பங்கேற்பு

வந்தவாசி, ஜூன்.20–

வந்தவாசியில் உள்ள அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நேற்று 21–வது பட்டமளிப்பு விழா நடந்தது. கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக இஸ்ரோ முன்னாள் திட்ட இயக்குனர் மயில்சாமி அண்ணாதுரை கலந்து கொண்டு 880 மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி பேசினார். அப்போது அவர் பேசியதாவது:–

மூச்சு உள்ளவரை முயற்சி இருக்க வேண்டும். அந்த முயற்சி தனது சுற்றம் மற்றும் நாட்டை உயர்த்துவதாக இருக்க வேண்டும். விரும்பியதை அடைவது மட்டுமே வெற்றியல்ல. விருப்பத்துக்கு மாறாக கிடைப்பதும் வெற்றியைத் தரும் என்பது எனது அனுபவம். இந்திய விண்வெளி ஆய்வகத்தில் புதிது புதிதாக செயற்கைகோள்களை உருவாக்கும் ஆராய்ச்சி பணியை விரும்பினேன். கிடைத்ததோ செயற்கைகோள்களின் செயல் இயக்கத்தை கவனிக்கும் பணி. அதையும் விரும்பி செய்து படிப்படியாக உயர்ந்து சந்திரயான் செயற்கைகோளுக்கான திட்ட இயக்குனரானேன்.

சாதித்தால் மிகப்பெரிய அளவில் அங்கீகாரம் கிடைக்கும். அயராத உழைப்பும் உயர்ந்த லட்சியமும் இருந்தால் நிலவுக்கு போவது கனவல்ல நிஜமே. பெண் என்ற காரணத்தால் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட காலம் மலையேறிவிட்டது. எனவே பெரிய கனவுகளுடன், அந்த கனவுகளுக்கு செயல் கொடுக்கும் உறுதிப்பாட்டுடன் பட்டங்களை பெற்றுச் செல்லுங்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் கல்லூரி செயலர் எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி, தெள்ளார் சுவாமி அபேதானந்தா பாலிடெக்னிக் கல்லூரி தலைவர் டி.கே.பி.மணி மற்றும் கல்லூரி பேராசிரியைகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஜூன் 20 2022
திங்கட்கிழமை
தின மதி

# இலக்கும் முயற்சியும்தான் நம்மை சான்றோர் ஆக்கும்

## மாணவிகளுக்கு மயில்சாமி அண்ணாதுரை அறிவுரை




வந்தவாசி, ஜூன் 20-

இலக்கும் முயற்சியுமே நம்மை சான்றோர் ஆக்கும் என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி மைய (இஸ்ரோ) முன்னாள் திட்ட இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை பேசினார்.

வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்ற 21-வது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக இஸ்ரோ முன்னாள் திட்ட இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை பங்கேற்று மாணவியருக்கு பட்டங்களை வழங்கினார். விழாவில் அவர் பேசியதாவது:

நம்மால் என்ன முடியும் என்பதை நிர்ணயிப்பது நமது மனம் மட்டுமே. மூச்சு உள்ளவரை முயற்சி இருக்க வேண்டும். அந்த முயற்சி தனது சுற்றம் மற்றும் நாட்டை உயர்த்துவதாக இருக்க வேண்டும். பிறக்கும் போதே யாரும் சான்றோராக பிறப்பதில்லை. அவர்களின் இலக்கும் முயற்சியுமே அவர்களை சான்றோர்களாக ஆக்குகிறது.

விரும்பியதை அடைவது மட்டுமே வெற்றியல்ல. விருப்பத்துக்கு மாறாக கிடைப்பதும் வெற்றியைத் தரும் என்பது எனது அனுபவம் ஆகும். இந்திய விண்வெளி ஆய்வகத்தில் புதிது, புதிதாக செயற்கைக் கோள்களை உருவாக்கும் ஆராய்ச்சிப் பணியை விரும்பினேன். கிடைத்ததோ செயற்கைக் கோள்களின் செயல் இயக்கத்தை கவனிக்கும் பணி. அதையும் விரும்பி செய்து படிப்படியாக உயர்ந்து சந்திராயன் செயற்கைக் கோளிற்கான திட்ட இயக்குநரானேன். 80-க்கும் மேற்பட்ட செயற்கைக் கோள்களை உருவாக்கியதில் முக்கிய பொறுப்பேற்றிருக்கிறேன். நிறைவாக சந்திராயன் 2-ஐ நிலவில் இறக்கிவிட்டு பின் பணி ஓய்வு பெற்றேன்.

பின்னர் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் கிட்டத்தட்ட 3 லட்சம் கி.மீ. பயணித்து சுமார் 10 லட்சம் மாணவர்களிடையே பேசியுள்ளேன். இந்தியா திறமைக்கு வாய்ப்பளித்து சாதனைக்கு சந்தர்ப்பம் அளிக்கிறது. சாதித்தால் மிகப் பெரிய அளவில் அங்கீகாரத்தையும் கொடுக்கிறது. அயராத உழைப்பையும் உயர்ந்த லட்சியமும் இருந்தால் நிலவுக்கு போவது கனவல்ல நிஜமே.

பெண் என்ற காரணத்தால் மட்டுமே வாய்ப்புகள் மறுக்கப்பட்ட காலம் மலையேறிவிட்டது. எனவே பெரிய கனவுகளுடன், அந்த கனவுகளுக்கு செயல் கொடுக்கும் உறுதிப்பாட்டுடன் பட்டச் சான்றிதழை பெற்றுச் செல்லுங்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

விழாவில் 880 மாணவியருக்கு அவர் பட்டங்களை வழங்கினார்.

விழாவுக்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி, தெள்ளார் சுவாமி அபேதானந்தா பாலிடெக்னிக் கல்லூரி தலைவர் டி.கே.பி.மணி மற்றும் கல்லூரி பேராசிரியைகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினகரன் 20.6.2022

## அகிலாண்டேஸ்வரி கல்லூரி பட்டமளிப்பு விழா

# மூச்சு உள்ளவரை முயற்சி இருக்க வேண்டும்

### இஸ்ரோ முன்னாள் இயக்குனர் பேச்சு



வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில் இஸ்ரோ முன்னாள் இயக்குனர் மயில்சாமி அண்ணாதுரை மாணவிக்கு பட்டம் வழங்கினார். உடன் கல்லூரி முதல்வர் எஸ்.ருக்குமணி, செயலாளர் எம்.ரமணன்.

**வந்தவாசி, ஜூன் 20:** வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் 21வது பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது.

கல்லூரி நிறுவனர் பா.முனிரத்தினம் தலைமை தாங்கினார். செயலாளர் எம்.ரமணன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் எஸ்.ருக்குமணி வரவேற்றார்.

விழாவில், இஸ்ரோ முன்னாள் இயக்குனர் மயில்சாமி அண்ணாதுரை கலந்து கொண்டு, 880 மாணவிகளுக்கு பட்டம் வழங்கி பேசியதாவது:

இன்று பட்டம் பெறும் மாணவிகள், தங்களை பல்வேறு பரிமாணங்களாக மாற்றி கொண்டு, வாழ்க்கையில் முன்னேற்ற பாதையை அடைய வேண்டும். மூச்சு உள்ளவரை முயற்சி இருக்க வேண்டும் என்பார்கள்..முயற்சி என்பது தன்னையும், தனது பெற்றோரையும் மற்றும் நாட்டையும் உயர்வுக்கு இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதில், சுவாமி அபேதானந்தா பாலிடெக்னிக் கல்லூரி நிர்வாக இயக்குனர் டிகேபி.மணி, லயன்ஸ் சங்க முன்னாள் மாவட்ட ஆளுநர் வி.எஸ்.தளபதி, மாவட்ட தலைவர் லியோ சரவணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இந்து தமிழ் திசை
TIRUPATI
புதன், ஜூன் 22, 2022

# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் பட்டமளிப்பு விழா

## ● விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை பங்கேற்பு

**திருவண்ணாமலை**

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் 21-வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. கல்லூரி நிறுவனர் முனிரத்தினம் தலைமை வகித்தார். இஸ்ரோ முன்னாள் திட்ட இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசும்போது, "மூச்சு உள்ளவரை முயற்சி இருக்க வேண்டும். அந்த முயற்சி தனது சுற்றும் மற்றும் நாட்டை உயர்த்துவதாக இருக்க வேண்டும். சந்திராயன் செயற்கைக் கோளுக்கான திட்ட இயக்குநராக இருந்து 80-க்கும் மேற்பட்ட செயற்கைக் கோள்களை உருவாக்கியதில் முக்கிய பொறுப்பேற்றிருக்கிறேன். நிறைவாக சந்திராயன் 2-ஐ நிலவில் இறக்கிவிட்டு பின் பணி ஓய்வு பெற்றேன். அயராத உழைப்பையும் உயர்ந்த லட்சியமும் இருந்தால் நிலவுக்கு போவது கனவல்ல நிஜமே. பெண் என்ற காரணத்தால் மட்டுமே வாய்ப்புகள் மறுக்கப்பட்ட காலம் மலையேறிவிட்டது. எனவே, பெரிய கனவுகளுடன் உறுதிப்பாட்டுடன் பட்டச் சான்றிதழ் பெற்றுச் செல்லுங்கள்" என்றார.




▶▶ வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் ஒரு மாணவிக்கு பட்டம் வழங்கிய இஸ்ரோ முன்னாள் திட்ட இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை.

நிகழ்ச்சியில் 880 மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. விழாவில் கல்லூரிச் செயலர் எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி, தாளாளர் சுவாமி அபேதானந்தா பாலிடெக்னிக் கல்லூரி தலைவர் டி.கே.பி.மணி மற்றும் கல்லூரி பேராசிரியைகள், மாணவிகள் பெற்றோர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

டம் வழங்கி பேசியதா

தினமணி

திங்கள்கிழமை, 20 ஜூன் 2022

# இலக்கும் முயற்சியுமே நம்மை சான்றோர் ஆக்கும்




பட்டமளிப்பு விழாவில் மாணவிக்கு பட்டத்தை வழங்கிய இஸ்ரோ முன்னாள் திட்ட இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை.

**வந்தவாசி, ஜூன் 19:** இலக்கும் முயற்சியுமே நம்மை சான்றோர் ஆக்கும் என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (இஸ்ரோ) முன்னாள் திட்ட இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை கூறினார்.

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 21-ஆவது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கிய அவர் மேலும் பேசியதாவது:

நம்மால் என்ன முடியும் என்பதை நிர்ணயிப்பது நமது மனம் மட்டுமே. மூச்சு உள்ளவரை முயற்சி இருக்க வேண்டும். அந்த முயற்சி நமது சுற்றம் மற்றும் நாட்டை உயர்த்துவதாக இருக்க வேண்டும். பிறக்கும்போதே யாரும் சான்றோராகப் பிறப்பதில்லை. அவர்களின் இலக்கும் முயற்சியுமே அவர்களை சான்றோர்களாக ஆக்குகிறது.

விரும்பியதை அடைவது மட்டுமே வெற்றியல்ல. விருப்பத்துக்கு மாறாகக் கிடைப்பதும் வெற்றியைத் தரும் என்பது எனது அனுபவம்.

இந்திய விண்வெளி ஆய்வகத்தில் புதிதுபுதிதாகசெயற்கைக்கோள்களை உருவாக்கும் ஆராய்ச்சிப் பணியை விரும்பினேன். ஆனால், கிடைத்ததோ செயற்கைக்கோள்களின் செயல் இயக்கத்தை கவனிக்கும் பணி. அதையும் விரும்பிச் செய்து படிப்படியாக உயர்ந்து சந்திரயான் செயற்கைக்கோள் ஏவும் திட்டத்தின் இயக்குநரானேன். 80-க்கும் மேற்பட்ட செயற்கைக்கோள்களை உருவாக்கியதில் முக்கியப் பொறுப்பேற்றிருக்கிறேன். நிறைவாக, சந்திரயான் 2-ஐ நிலவில் இறக்கிய பிறகு பணி ஓய்வு பெற்றேன். இந்தியா திறமைக்கு வாய்ப்பளித்து சாதனைக்கு சந்தர்ப்பம் அளிக்கிறது. சாதித்தால் மிகப்பெரிய அளவில் அங்கீகாரத்தையும் கொடுக்கிறது. அயராத உழைப்பும் உயர்ந்த லட்சியமும் இருந்தால் நிலவுக்கு போவது கனவல்ல நிஜமே. பெண் என்ற காரணத்தால் மட்டுமே வாய்ப்புகள் மறுக்கப்பட்ட காலம் மலையேறிவிட்டது என்றார் அவர். நிகழ்ச்சிக்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். செயலர் எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி, தெள்ளார் சுவாமி அபேதானந்தா பாலிடெக்னிக் கல்லூரித் தலைவர் டி.கே.பி.மணி, பேராசிரியைகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்து தமிழ் திசை

TIRUPATI
புதன், ஜூன் 22, 2022

# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் பட்டமளிப்பு விழா

## • விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை பங்கேற்பு




▶▶ வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் ஒரு மாணவிக்கு பட்டம் வழங்கிய இஸ்ரோ முன்னாள் திட்ட இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை.

■ திருவண்ணாமலை

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் 21-வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. கல்லூரி நிறுவனர் முனிரத்தினம் தலைமை வகித்தார். இஸ்ரோ முன்னாள் திட்ட இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசும்போது, "மூச்சு உள்ளவரை முயற்சி இருக்க வேண்டும். அந்த முயற்சி தனது சுற்றும் மற்றும் நாட்டை உயர்த்துவதாக இருக்க வேண்டும். சந்திராயன் செயற்கைக் கோளுக்கான திட்ட இயக்குநராக இருந்து 80-க்கும் மேற்பட்ட செயற்கைக் கோள்களை உருவாக்கியதில் முக்கிய பொறுப்பேற்றிருக்கிறேன். நிறைவாக சந்திராயன் 2-ஐ நிலவில் இறக்கிவிட்டு பின் பணி ஓய்வு பெற்றேன். அயராத உழைப்பையும் உயர்ந்த லட்சியமும் இருந்தால் நிலவுக்கு போவது கனவல்ல நிஜமே. பெண் என்ற காரணத்தால் மட்டுமே வாய்ப்புகள் மறுக்கப்பட்ட காலம் மலையேறிவிட்டது. எனவே, பெரிய கனவுகளுடன் உறுதிப்பாட்டுடன் பட்டச் சான்றிதழ் பெற்றுச் செல்லுங்கள்" என்றார.

நிகழ்ச்சியில் 880 மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. விழாவில் கல்லூரிச் செயலர் எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி, தாளாளர் சுவாமி அபேதானந்தா பாலிடெக்னிக் கல்லூரி தலைவர் டி.கே.பி.மணி மற்றும் கல்லூரி பேராசிரியைகள், மாணவிகள் பெற்றோர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஜூன் 19 2022
ஞாயிற்றுக்கிழமை

தினமதி




# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி, வந்தவாசி.

(Re-Accredited with 'A' Grade By NAAC) (Recognised under Section 2 (f) & 12 (B) of UGC Act,)
(Permanent Affiliation Granted by Thiruvalluvar University - Vellore)

## 21-வது ஆண்டு பட்டமளிப்பு விழா

நாள் : 19-06-2022 ஞாயிற்றுக்கிழமை நேரம் : காலை 11.00

இடம் : கல்லூரி வளாகம்

பத்மஸ்ரீ. டாக்டர்.

## மயில்சாமி அண்ணாதுரை



மாணவிகளுக்கு பட்டம் வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்

## அனைவரும் வருக.. வருக...

பல்கலைக்கழகத்தில் முதல் தரவரிசைப் பெற்றவர் 2015-2018 ஆண்டு



Selvi.M.NOORIL FAZILA B.Sc., Computer Science



Selvi.A.VINODHINI B.Sc., Physics



Selvi.S.GAYATHRI B.Sc., Chemistry

## டா.திரு.B.முனிரத்தினம்

நிறுவனர் மற்றும் தாளாளர் - SAEWC - வந்தவாசி

## டா.திரு.M.ரமணன்

செயலாளர், சின்டிகேட் Ex.மெம்பர்
திருவள்ளுவர் பல்கலைக்கழகம் - வேலூர்

## டாக்டர்.S.ருக்மணி

முதல்வர்

குறிப்பு : 2022 – 23 ஆம் கல்வி ஆண்டிற்கான மாணவிகள் சேர்க்கை நடைபெறுகிறது சேர்க்கைக்கு நேரில் வரவும்

புதன்கிழமை, 22 ஜூன் 2022

**வந்தவாசி**: வந்தவாசி அரசு மருத்துவமனையில் மருத்துவ அலுவலர் கே.சிவப்பிரியா தலைமையில் சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற யோகா தின விழாவில் கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி, கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். வந்தவாசியை அடுத்த சத்யா நகர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில், ஸ்ரீகிருஷ்ணா கல்வி மையம் சார்பில் யோகா தின விழா நடைபெற்றது.



### வந்தவாசியில்

# அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி சார்பில் சைக்கிள் பேரணி

வந்தவாசி, ஜூன்.12-

உலக மிதிவண்டி தினத்தை யொட்டி வந்தவாசியில் அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி நாட்டு நலப்பணி திட்டம் சார்பில் சைக்கிள் பேரணி நடந்தது. இந்த பேரணியை கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தொடங்கி வைத்தார். கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி, கல்லூரி செயலர் எம்.ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகரின் முக்கிய வீதிகளில் சைக்கிள் பேரணி சென்றது. இதில் கல்லூரி நாட்டு நலப்பணி திட்ட அலுவலர்கள் டி.பாரதி, ஏ.கலைவாணி மற்றும் மாணவிகள் கலந்துகொண்டனர்.

12-6-2022

தினத்தந்தி

தினமலர்

ஞாயிறு ஜூன் 19, 2022

G.O.Ms.No.586

Dated:21.07.1995

"There will never be a new world until women are part of it" - Alice Paul

# SRI AKILANDESWARI WOMEN'S COLLEGE, VANDAVASI

(Re-Accredited with 'A' Grade By NAAC) - (Recognised under Section 2 (f) & 12 (B) of UGC Act)
- (Permanent Affiliation Granted by Thiruvalluvar University - Vellore)
Tindivanam Highway, Vandavasi - 604 408. T.V.Malai Dt.,

We the Management, Principal, Staff and Students take pleasure in inviting you on the occasion of the

# 21st GRADUATION DAY



**on 19th June 2022 (Sunday) at 11.00 am**

**Venue: College Campus**

Padmashri.

## Dr.MYLSWAMY ANNADURAI

**Indian Scientist**

Chairman-Board of Governors - National Design and Research Forum - Bengaluru
Vice President - Tamil Nadu State Council for Science and Technology - Chennai

*has graciously consented to deliver the convocation address and distribute the degree certificates*

in the presence of

Ln. Thiru. **B.Munirathinam**
(Founder and Chairman - SAEWC - Vandavasi)

Ln. Thiru. **M.Ramanan**
Secretary
Former - Syndicate Member
Thiruvalluvar University - Vellore

Dr. **S.Rukmani**
Principal

*All are welcome !*

**SWAMY ABEDHANANDHA EDUCATIONAL TRUST, VANDAVASI.**

குறிப்பு: 2022-2023 ஆம் ஆண்டிற்கான மாணவிகள் சேர்க்கை நடைபெறுகிறது.
சேர்க்கைக்கு நேரில் வரவும்.

தினமலர்

வியாழன் ஜூன் 2, 2022

# 12-ஆம் ஆண்டு நினைவஞ்சலி

எங்கள் கல்லூரி நிறுவனர்
Ln.B.முனிரத்தினம் அவர்களின் தாயார்



## திருமதி பா.ரேணு அம்மாள்

க/பெ பாலகிருஷ்ணன் நாயுடு
தாழம்பூண்டி கிராமம், மழையூர் - வந்தவாசி வட்டம்

அவர்களின் 12-ஆம் ஆண்டு நினைவுநாளில்
அவரை வணங்குகின்றோம்

## ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி

வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம்
சுவாமி அபேதானந்தா கல்வி அறக்கட்டளை, வந்தவாசி

இந்து தமிழ் திசை

TIRUPATI
ஞாயிறு, ஜூன் 19, 2022

G.O.Ms.No.586

Dated:21.07.1995



'There will never be a new world until women are part of it' - Alice Paul

# SRI AKILANDESWARI WOMEN'S COLLEGE, VANDAVASI

(Re- Accredidted with 'A' Grade by NAAC)
(Recognised under Section 2(f) & 12(B) of UGC Act)
(Permanent Affiliation Granted by Thiruvalluvar University-Vellore)

**Tindivanam Highway, Vandavasi - 604 408. T.V.Malai Dt.,**

**We the Management, Principal, Staff and Students**

**take Pleaure in inviting you on the occasion of the**

## 21st GRADUATION DAY

on 19th June 2022 (Sunday) at 11.00am

**Venue: College Campus**



**Padmashri.Dr.MYLSWAMY ANNADURAI**
**Indian Scientist**

Chairman - Board of Governors - National Design and Research Forum - Bengaluru
Vice President - Tamil Nadu State Council For Science and Technology - Chennai

**has graciously consented to deliver the convocation address and distribute the degree certificates.**

in the presence of

**Ln.Thiru.B.Munirathinam**
(Founder and Chairman - SAEWC - Vandavasi)

**Ln.Thiru.M.Ramanan**
Secretary
Former - Syndicate Member, Thiruvalluvar University - Vellore

**Dr.S.Rukmani**
Principal

**All are welcome !**

**CONGRATULATIONS:University First Rank Holders (Gold Medalist) 2015-2018 Batch**



Selvi. M.NOORIL FAZILA B.Sc., Computer Science



Selvi.A.VINODHINI B.Sc., Physics



Selvi. S. GAYATHRI B.Sc., Chemistry

தற்போது 2022 - 23 ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது. சேர்க்கைக்கு கல்லூரி அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**PH: 04183 - 225713, 299987**

புதன்கிழமை, 7 செப்டம்பர், 2022

தினமணி

# பல்கலை. தேர்வில் வந்தவாசி கல்லூரி மாணவிகள் சிறப்பிடம்

வந்தவாசி, செப். 6: கடந்த 2020-21ஆம் கல்வியாண்டு வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழக தேர்வில் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி மாணவிகள் 4 பேர் பல்கலைக்கழக அளவில் முதலிடம் பெற்றனர்.

இதுகுறித்து அந்தக் கல்லூரி நிர்வாகம் வெளியிட்ட அறிக்கை:

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி கல்லூரியின் பி.எஸ்சி. வேதியியல் பாடப் பிரிவு மாணவி டி.பிரதீபா, பி.எஸ்சி., கணினி அறிவியல் பிரிவு மாணவி எல்.ரஷிகா பர்வீன், எம்.எஸ்சி. உயிரி வேதியியல் பிரிவு மாணவி எம்.காவியா, எம்.எஸ்சி. கணினி அறிவியல் பிரிவு மாணவி எ.கிரிஜா



பல்கலைக்கழக தேர்வில் முதலிடம் பெற்ற வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி மாணவிகள் (இடமிருந்து) டி.பிரதீபா, எல்.ரஷிகா பர்வீன், எம்.காவியா, எ.கிரிஜா.

ஆகியோர் பல்கலைக்கழக அளவில் முதலிடம் பெற்றனர்.

மேலும், 2021-22-ஆம் கல்வியாண்டு தேர்வில் இளநிலைப் பிரிவில் பி.எஸ்சி., மைக்ரோபயாலஜி பாடப் பிரிவில் 100 சதவீத மாணவிகளும், முதுநிலை பிரிவில் எம்.எஸ்சி., இயற்பியல், மைக்ரோபயாலஜி, கணினி அறிவியல், வணிகவியல் பிரிவுகளில் 100 சதவீத மாணவிகளும் தேர்ச்சி பெற்றனர். இதையடுத்து, சிறப்பிடம் பெற்ற மாணவிகளை, கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம், செயலர் எம்.ரமணன், முதல்வர் எஸ்.ருக்மணி மற்றும் பேராசிரியைகள் செவ்வாய்க்கிழமை பாராட்டினர்.

தமிழ் சுடர்

ஞாயிற்றுக்கிழமை, ஜூன் 19, 2022





வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் 27வது கல்லூரி தின விழாவில் சிறப்பு விருந்தினர் கல்லூரியின் முன்னாள் முதல்வர் மைதிலி கலந்து கொண்டு பல்வேறு பாடப் பிரிவுகளில் முதன்மை பெற்ற மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார். உடன் கல்லூரி செயலாளர் லயன். பி.முனிரத்தினம், கல்லூரி செயலர் லயன். எம்.ரமணன், கல்லூரி முதல்வர் ருக்மணி, பேராசிரியர்கள் செல்வகுமார், வடிவழகி மற்றும் பலர் உள்ளனர்.

# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் கல்லூரி தின விழா

வந்தவாசி,ஜூன் 19–

வந்தவாசி ஸ்ரீ அகிலாண் டேஸ்வரி மகளிர் கல்லூரியில் கடந்த 16ந் தேதி அன்று 27வது ஆண்டு கல்லூரி தின விழா கல்லூரியின் கலை அரங்கத்தில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு கல்லூரி நிறுவனர் லயன்ஸ் பி.முனி ரத்தினம் முன்னிலை வகித்தார். கல்லூரி செயலர் லயன்ஸ் எம்.ரமணன் தலைமை தாங்கி தலைமையுரையாற்றினார்.

உயிர் வேதியியல் துறை தலைவி முனைவர் வடிவழகி வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் ருக்மணி கல்லூரியின் ஆண்டறிக்கையை வாசித்தார். சிறப்பு விருந்தினரை இயற்பியல் துறை தலைவர். செல்வகுமார் அறிமுகப்படுத்தினார்.

சிறப்பு விருந்தினராக கல்லூரியின் முன்னாள் முதல்வர் மைதிலி கலந்து கொண்டு பல்வேறு ஊக்க கருத்துக்களை மாணவி களுக்கு எடுத்துரைத்தார். மாணவிகள் பட்டப்படிப்புடன் இதர கல்விச்சார்ந்த படிப்பறிவினையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று கருத்துரை வழங்கினார். இந்நிகழ்வில் பல்வேறு பாடப்பிரிவில் முதன்மை பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. கல்லூரியில் செயல்படும் NSS, YRC,RRC,WDC, ECO, LEO,CCC, IIC,HNC, OSA& Placement முதலான சங்கங்களின் ஒருங்கிணைப்பாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

நிறைவாக வணிகவியல் மற்றும் கணினி பயன்பாடு துறை தலைவி மு.வரலட்சுமி நன்றி தெரிவித்தார்.

தமிழ் சுடர்

வியாழக்கிழமை, செப்டம்பர் 8, 2022

# வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி மாணவிகள் 4 பேர் பல்கலைக்கழக அளவில் முதலிடம்

வந்தவாசி,செப்.8–

திருவள்ளுவர் பல்கலைக் கழகம் கடந்த 2020-21ம் கல்வி ஆண்டில் நடத்திய தேர்வில் பல்கலைக்கழக அளவில் முதலிடத்தை பிடித்து வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டே ஸ்ரீ கல்லூரி சேர்ந்த 4 மாணவிகள் சிறப்பிடம் பிடித்துள்ளனர் திருவள்ளூர் பல்கலைக்கழக அளவில் இளநிலை பாடப்பிரிவில் பிஎஸ்சி வேதியலில் மாணவி பிரதீபா, பிஎஸ்சி கணினி அறிவியல் மாண்வி ரஷிகா பிரவீன் ஆகிய 2 மாணவிகளும் மற்றும் முதுநிலை பாடப்பிரிவில் எம்எஸ்சி உயிர் வேதியலில் மாணவி காவியா, எம் எஸ் சி கணினி அறிவியல் மாணவி கிரிஜா ஆகிய 2மாணவிகளும் முதலிடம் பிடித்து பிடித்துள்ளனர். மேலும் 26 மாணவிகள் பல்கலைக்கழக அளவில் முதல் 10 இடங்களை பெற்று தேர்ச்சி பெற்றுள்ளனர் மேலும் 2021-22ம் கல்வி ஆண்டில் நடத்தப்பட்ட இறுதி ஆண்டு தேர்வில் இளநிலை பிரிவில் ஆங்கிலத்தில் 91சதவீதம், வணிகவியலில் 78 சதவீதம், உயிர் வேதியியல் 88 சதவீதம், வேதியலில் 81 சதவீதம், அறிவியலில் 97 சதவீதம், நுண்ணறிவியலில் 100 சதவீதம் கணிதத்தில் 92 சதவீதம், இயற்பியலில் 86 சதவீதம், பிசிஏ வில் 91 சதவீதம், வணிகவியலில் 98 சதவீத மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர் முதுநிலை பிரிவில் ஆங்கிலத்தில் 89 சதவீதம், உயர் வேதியலில் 88 சதவீதம், வணிகவியல், கணினி அறிவியல் நுண்ணறிவியல் மற்றும் இயற்பியலில் தலா 100 சதவீதம், கணிதத்தில் 91 சதவீத மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.



அவர்களை பள்ளி நிர்வாகிகள் மற்றும் பேராசிரியர்கள் ஆசிரியர்கள் பாராட்டினர்

மாலை மலர்
8-9-2022 (வியாழக்கிழமை)



பல்கலைக்கழக அளவில் முதலிடம் பெற்ற வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி மாணவியர் (இடமிருந்து) டி.பிரதீபா, எல்.ரஷிகாபர்வீன், எம்.காவியா, எ.கிரிஜா.

## பல்கலைக்கழக தேர்வில்

# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி கல்லூரி மாணவிகள் 4 பேர் முதலிடம்

வந்தவாசி, செப்.8—

திருவள்ளுவர் பல்கலைக்கழக தேர்வில் வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி மாணவிகள் 4 பேர் பல்கலைக்கழக அளவில் முதலிடம் பெற்றுள்ளனர்.

இந்த கல்லூரியின் பி.எஸ்சி., வேதியியல் பாடப்பிரிவு மாணவி டி.பிரதீபா, பி.எஸ்சி., கம்ப்யூட்டர் சயின்ஸ் பாடப்பிரிவு மாணவி எல்.ரஷிகாபர்வீன், எம்.எஸ்சி., பயோகெமிஸ்ட்ரி பாடப்பிரிவு மாணவி எம்.காவியா, எம்.எஸ்சி., கம்ப்யூட்டர் சயின்ஸ் பாடப்பிரிவு மாணவி எ.கிரிஜா ஆகியோர் பல்கலைக்கழக அளவில் முதலிடம்பெற்றுள்ளனர்.

மேலும் 2021—22—ம் கல்வியாண்டு தேர்வில் இளநிலை பிரிவில் பி.எஸ்சி., மைக்ரோபயாலஜி பாடப்பிரிவில் 100 சதவீதம் மாணவியரும், முதுநிலை பிரிவில் எம்.எஸ்சி., இயற்பியல், மைக்ரோபயாலஜி, கம்ப்யூட்டர் சயின்ஸ், வணிகவியல் பாடப்பிரிவுகளில் 100 சதவீதம் மாணவியரும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இதையடுத்து முதலிடம் பெற்ற மாணவியரை கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம், செயலர் எம்.ரமணன், முதல்வர் எஸ்.ருக்மணி மற்றும் பேராசிரியைகள் செவ்வாய்க்கிழமை பாராட்டினர்.

இந்து தமிழ் திசை

TIRUPATI
வியாழன், செப்டம்பர் 22, 2022

# வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் கருத்தரங்கம்

**திருவண்ணாமலை**

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் உயிர் வேதியியல் மற்றும் நுண்ணுயிரியல் துறை சார்பில் கருத்தரங்கம் நடை பெற்றது. கல்லூரி அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு கல்லூரி நிறுவனர் பா.முனிரத்தினம் தலைமை தாங்கினார். கல்லூரி செயலாளர் மு.ரமணன், கல்லூரி முதல்வர் ருக்மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நுண்ணுயிரியல் துறைத் தலைவி மு.ஜெகதி வரவேற்றார்.



வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் உயிர் வேதியியல் மற்றும் நுண்ணுயிரியல் துறை சார்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர்களாக பி.எஸ் அப்துர் ரஹ்மான் கிரசெண்ட் இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸ் அண்டு டெக்னாலஜி ஸ்கூல் ஆப் சயின்சை சேர்ந்த முனைவர்கள் ஹேமலதா, பரிதாபேகம், ரஞ்சனி ஆகியோர் பங்கேற்றுப் பேசினர்.

மேலும், இரு கல்லூரி நிறுவனங்கள் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தமும் கையெழுத்திடப்பட்டது. முடிவில், உயிர் வேதியியல் துறைத் தலைவர் வடிவழகி நன்றி தெரிவித்தார்.

தினமலர்

8.9.2022

# அகிலாண்டேஸ்வரி கல்லுாரி மாணவிகள் திருவள்ளுவர் பல்கலை தேர்வில் சாதனை



பிரதீபா ரஷிகா பர்வீன் காவியா கிரிஜா

**வந்தவாசி, செப். 8–**

2020–2021ம் கல்வி ஆண்டுக்கான வேலுார் திருவள்ளுவர் பல்கலைக் கழக தேர்வில், வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லுாரி மாணவிகள் 4 பேர் பல்கலைக்கழக அளவில் முதலிடம் பெற்றனர்.

இதுகுறித்து கல்லுாரி நிர்வாகம் தரப்பில் கூறியுள்ளதாவது:

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி கல்லுாரியில் பயின்ற பி.எஸ்சி வேதியியல் பாடப்பிரிவு மாணவி பிரதீபா, பி.எஸ்சி கணினிஅறிவியல் பிரிவு மாணவி ரஷிகா பர்வீன், எம்.எஸ்சி உயிர் வேதியியல் பிரிவு மாணவி காவியா, எம்.எஸ்சி கணினிஅறிவியல் பிரிவு மாணவி கிரிஜா ஆகியோர் 2021–22ம் கல்வியாண்டுக்கான தேர்வில் திருவள்ளுவர் பல்கலைக் கழக அளவில் முதலிடம் பெற்றனர்.

மேலும், இளநிலை பிரிவில் பி.எஸ்சி மைக்ரோ பயாலஜி பாடப்பிரிவில் 100 சதவீத மாணவிகளும், முதுநிலை பிரிவில் எம்.எஸ்சி இயற்பியல், மைக்ரோ பயாலஜி, கணினிஅறிவியல் மற்றும் வணிகவியல் பிரிவுகளில் 100 சதவீத மாணவிகளும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

அதிக ரேங்க் எடுத்து சிறப்பிடம் பெற்ற மாணவிகளை கல்லுாரி நிறுவனர் முனிரத்தினம், செயலாளர் ரமணன், முதல்வர் ருக்மணி மற்றும் பேராசிரியர்கள் பாராட்டினர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை, 18 நவம்பர் 2022

தினமணி

# கல்லூரியில் வணிகவியல் கருத்தரங்கம்




கருத்தரங்கில் பேசிய காஞ்சிபுரம் ஸ்ரீசங்கரா கலை, அறிவியல் கல்லூரி வணிகவியல் துறைப் பேராசிரியர் கே.ஏ.குஞ்சிதபாதம்.

**வந்தவாசி, நவ.17:** வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் வணிகவியல் துறை சார்பில் ஒரு நாள் கருத்தரங்கம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கருத்தரங்கிற்கு கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி தலைமை வகித்தார். கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம், செயலர் எம்.ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வணிகவியல் துறைத் தலைவர் ப்ரீத்தி வரவேற்றார். கணினிமயமாக்கலின் மூலம் சந்தைப்படுத்துதல் என்ற தலைப்பில் காஞ்சிபுரம் ஸ்ரீசங்கரா கலை, அறிவியல் கல்லூரி வணிகவியல் துறைப் பேராசிரியர் கே.ஏ.குஞ்சிதபாதம் பேசினார். அப்போது, டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மற்றும் அதன் சேவைகள் குறித்து அவர் மாணவிகளுக்கு விளக்கினார். பேராசிரியை தாரகசெல்வி நன்றி தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை, 23 செப்டம்பர், 2022

தினமணி

# கல்லூரியில் கருத்தரங்கம்

வந்தவாசி, செப். 22: வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் ஒரு நாள் கருத்தரங்கம் புதன்கிழமை நடைபெற்றது.

அந்தக் கல்லூரியின் உயிரி வேதியியல், நுண்ணுயிரியல் துறை சார்பில் நடைபெற்ற இந்த கருத்தரங்கிற்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி நுண்ணுயிரியல் துறைத் தலைவர் மு.ஜெகதி வரவேற்றார். சென்னை வண்டலூர் பி.எஸ். அப்துர் ரஹ்மான் கிரசன்ட் கல்லூரி பேராசிரியைகள் எஸ்.ஹேமலதா, ஜெ.பரிதாபேகம், எஸ். ரஞ்சனி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

தினத்தந்தி

18-11-2022




வந்தவாசியில்

# அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் கருத்தரங்கு

வந்தவாசி; நவ.18-

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் வணிகவியல் துறை சார்பில் ஒரு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி தலைமை தாங்கினார். கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம், கல்லூரிச் செயலர் எம்.ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி வணிகவியல் துறைத் தலைவர் பிரீத்தி வரவேற்றார்.

கணினிமயமாக்கலின் மூலம் சந்தைப்படுத்துதல் என்ற தலைப்பில் காஞ்சீபுரம் ஸ்ரீசங்கரா கலை அறிவியல் கல்லூரி வணிகவியல் துறை பேராசிரியர் கே.ஏ.குஞ்சிதபாதம் சிறப்புரையாற்றினார்.

அப்போது, டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மற்றும் அதன் சேவைகள் குறித்து அவர் விளக்கி பேசினார். முடிவில் பேராசிரியை தாரகசெல்வி நன்றி கூறினார்.

தினகரன்

18.11.2022

## வந்தவாசி அகிலாண்டேஸ்வரி

# மகளிர் கல்லூரியில் வணிகவியல் துறை கருத்தரங்கம்




வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் வணிகவியல் துறை சார்பில் மாநில அளவிலான கருத்தரங்கில் காஞ்சிபுரம் சங்கரா கலைக்கல்லூரி உதவி பேராசிரியர் கே.ஏ.குஞ்சிதபாதம் பேசினார்.

வந்தவாசி, நவ.18: வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் வணிகவியல் துறைகள் மாநில அளவிலான கருத்தரங்கம் நேற்று நடந்தது.

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் வணிகவியல் துறை சார்பில் மாநில அளவிலான கருத்தரங்கம் நேற்று கல்லூரி வளாகத்தில் நடந்தது. நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் எஸ்.ருக்குமணி தலைமை தாங்கினார். கல்லூரி நிறுவனர் பா.முனிரத்தினம், செயலாளர் எம்.ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வணிகவியல் துறை தலைவி பிரீத்தி வரவேற்றார். இதில் காஞ்சிபுரம் சங்கரா கலைக் கல்லூரி உதவி பேராசிரியர் கே.ஏ. குஞ்சிதபாதம் கலந்து கொண்டு கணினி மயமாக்குதல் மூலம் சந்தைப்படுத்துதல் என்ற தலைப்பில் விரிவாக பேசினார்.

முடிவில் கல்லூரி உதவிபேராசிரியை தாரகசெல்வி நன்றி கூறினார்.

வியாழன், நவம்பர் 24, 2022

இந்து தமிழ் திசை

# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் கருத்தரங்கம்

● திருவண்ணாமலை

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் தேசிய கல்வி வளர்ச்சி தின கருத்தரங்கம் நடைபெற்றது.

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் தமிழ்துறை, ஐஐசி இணைந்து நடத்திய தேசிய கல்வி வளர்ச்சி தின கருத்தரங்குக்கு தமிழ்த்துறை தலைவர் ஞானமலர் வரவேற்றார். கல்லூரி நிறுவனர் முனிரத்தினம் முன்னிலை வகித்தார். கல்லூரி செயலர் ரமணன் வாழ்த்திப் பேசினார். கல்லூரி முதல்வர் ருக்மணி தலைமை தாங்கினார். தமிழ்த்துறை உதவி பேராசிரியை கலைவாணி சிறப்பு விருந்தினர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

கருத்தரங்கில் தன்னம்பிக்கை பேச்சாளர் மற்றும் செய்யாறு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் இயற்பியல் துறை உதவி பேராசிரியர் ராஜசேகரன் பங்கேற்று, தேசிய கல்வி வளர்ச்சி தினம் கொண்டாடுவதின் நோக்கம் உள்ளிட்டவை குறித்து பேசினார்.

முன்னதாக நிகழ்ச்சியை உதவி பேராசிரியை எழிலரசி தொகுத்து வழங்கினார். முடிவில், உதவி பேராசிரியை கிருஷ்ணகுமாரி நன்றி தெரிவித்தார்.




வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் தேசிய கல்வி வளர்ச்சி தின கருத்தரங்கம் நடைபெற்றது.

திங்கள்கிழமை, 28 நவம்பர் 2022

தினமணி

# கல்லூரியில் கருத்தரங்கம்

**வந்தவாசி, நவ. 27:** வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் கணினி பயன்பாட்டுத் துறை சார்பில் ஒரு நாள் கருத்தரங்கம் சனிக்கிழமை நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி தலைமை வகித்தார். செயலர் எம்.ரமணன் முன்னிலை வகித்தார். கணினி பயன்பாட்டுத் துறைத் தலைவர் ராஜசெல்வி வரவேற்றார். சென்னை லயோலா கலை, அறிவியல் கல்லூரியின் தரவு அறிவியல் துறைப் பேராசிரியர் அ.மணிமுத்து பேசினார்.

அப்போது, தரவு அறிவியலின் வளர்ச்சி மற்றும் அதன் சேவைகள் குறித்தும், தரவு அறிவியலில் புதுமையான யோசனைகள் குறித்தும் அவர் மாணவிகளுக்கு விளக்கிக் கூறினார். கல்லூரி கணினி பயன்பாட்டுத் துறைப் பேராசிரியை சுமிதா நன்றி தெரிவித்தார்.

தினமணி

புதன்கிழமை 15 பிப்ரவரி 2023

# கல்லூரியில் விற்பனைச் சந்தை



ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற விற்பனைச் சந்தையை ஆர்வமுடன் பார்வையிட்ட மாணவிகள்.

**வந்தவாசி, பிப். 14:** தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம், வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி ஆகியவை சார்பில் விற்பனைச் சந்தை திங்கள்கிழமை தொடக்கி வைக்கப்பட்டது.

கல்லூரி வளாகத்தில் 3 நாள்கள் நடைபெறும் இந்தச் சந்தையில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் சுயஉதவிக் குழுவினர் தயாரித்த கைவினைப் பொருள்கள், மர பொம்மைகள், அழகு சாதனப் பொருள்கள், பழ வகைகள், பாரம்பரிய உணவுப் பொருள்கள் ஆகியவற்றை காட்சிக்கும், விற்பனைக்கும் வைத்திருந்தனர். நிகழ்ச்சிக்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். செயலர் எம்.ரமணன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி விற்பனை சந்தையை திறந்து வைத்தார்.

வாழ்வாதார இயக்க உதவித் திட்ட அலுவலர்கள் ஜான்சன், சந்திரகுமார், வெங்கடேசன், வில்லியம் சகாயம் ஆகியோர் விற்பனைச் சந்தையை பார்வையிட்டனர். கல்லூரி மாணவிகள் சந்தையை ஆர்வமுடன் பார்வையிட்டு பொருள்களை வாங்கிச் சென்றனர்.

தினமணி

# ஸ்ரீஅபேதானந்தா சுவாமிகள் நினைவு தினம்

வந்தவாசி, டிச21: வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் ஸ்ரீ அபேதானந்தா சுவாமிகளின் நினைவு தினம் செவ்வாய்க்கிழமை கடைபிடிக்கப்பட்டது.

இதையொட்டி கல்லூரி வளாகத்தில் அவரது உருவப் படத்துக்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம், செயலர் எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி மற்றும் பேராசிரியைகள், மாணவிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்து தமிழ் திசை

புதன், பிப்ரவரி 15, 2023



வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் 'கல்லூரி சந்தை' நடைபெற்றது.

## அகிலாண்டேஸ்வரி கல்லூரியில்

# கல்லூரி சந்தை நிகழ்ச்சி

● திருவண்ணாமலை

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம், ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி இணைந்து மூன்று நாட்கள் நடைபெறும் 'கல்லூரி சந்தை - 2023' விழா கல்லூரியில் நேற்று முன் தினம் தொடங்கியது.

கல்லூரி நிறுவனர் பா.முனிரத்தினம் தலைமை வகித்தார். கல்லூரி செயலாளர் மு.ரமணன் முன்னிலை வகித்தார். முதல்வர் சி.ருக்மணி குத்துவிளக்கு ஏற்றி வைத்து கல்லூரி சந்தையை தொடங்கி வைத்தார்.

உதவி திட்ட அலுவலர்கள் (வாழ்வாதாரம்) ஒய்.ஜான்சன், சந்திரகுமார், வெங்கடேசன், வில்லியம் சகாயம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மகளிர் குழுக்களின் உற்பத்தி பொருட்கள், சந்தையில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. வட்டார இயக்க மேலாளர் சாந்தி நன்றி கூறினார்.

கல்லூரி சந்தை நிகழ்ச்சியை வணிகவியல் துறை பேராசிரியை கே.ரம்யா மற்றும் மாணவிகள் செய்திருந்தனர்.

இந்து தமிழ் திசை

புதன், ஜனவரி 25, 2023




வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

## அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில்

# விழிப்புணர்வு முகாம்

● திருவண்ணாமலை

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் வேலை வாய்ப்பு துறை சார்பில் நாஸ்காம் மற்றும் ஸ்கில்ஸ்டா இணைந்து இணைய பயன்பாட்டில் பாது காப்பு மற்றும் இணையத்தை பயன்படுத்தும் நுட்பங்கள் என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் ருக்மணி தலைமை வகித்தார். கல்லூரி நிறுவனர் முனிரத்தினம், செயலா ளர் ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நுண்ணுயிரியல் துறை பேராசிரியை மற்றும் வேலை வாய்ப்பு அலுவலர் வான்மதி செல்வி வரவேற்றார்.

அருணை இன்போடேக் நிறுவனத்தின் இயக்குநர் ஜீவானந்தம், ஸ்கில்ஸ்டா நிறுவனத்தின் மூத்த மேலாளர் பாபு ராவ், மேலாளர் சங்கர் விஜயன், தொழிற் முன்னேற்ற இயக்குநர் சுந்தர் ஆகியோர் சிறப்புரையாற்றினர். முடிவில். ஆங்கில துறை விரிவுரையாளர் பவித்ரா நன்றி கூறினார்.

தின செய்தி | வெள்ளி, மார்ச் 3, 2023




■ திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் தேசிய அறிவியல் தினம் மற்றும் அறிவியல் கண்காட்சி கல்லூரி முதல்வர் ருக்மணி தலைமையில் நடைபெற்றபோது எடுத்தபடம். அருகில் கல்லூரி நிறுவனர் முனிரத்தினம் கல்லூரி செயலர் வி.ரமணன் இயற்பியல் துறை தலைவர் செல்வகுமார் அறிவியல் சங்க செயலர் கோபால் பார்த்தசாரதி ஆகியோர் உள்ளனர்.

## வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில்

# தேசிய அறிவியல் கண்காட்சி

வந்தவாசி, மார்ச்.3–

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் தேசிய அறிவியல் தினம் மற்றும் அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. இவ்விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் ஷி.ருக்மணி தலைமை தாங்கினார்.

கல்லூரி நிறுவனர் முனிரத்தினம் கல்லூரி செயலர் வி.ரமணன் முன்னிலை வகிக்க இயற்பியல் துறை தலைவர் செல்வகுமார் அனைவயும் வரவேற்றார்.

அறிவியல் சங்க செயலர் கோபால் பார்த்தசாரதி, தமிழ்நாடு தேசிய அறிவியல் தினத்தின் முக்கியத்துவத்தினை எடுத்துரைத்தார். மேலும் சிறப்பு விருத்தினர் 360 நிறுவன குழுமங்களின் தலைவர் முனைவர் நா.சுரேஷ்குமார் ஆளில்லா விண்கலம் பறக்கும் விதத்தினை செய்முறை மூலம் பறக்க விட்டு மாணவிகளுக்கு கண்கவர் விருந்தளித்தார்.

மேலும் தண்ணீரின் அதிசயங்கள் மற்றும் அதனின் அறிவியல் இன்றியமையாமை பற்றி மாணவிகளுக்கு செயல் விளக்கமளித்தார்.

இதில் அனைத்து அறிவியல் துறை மாணவிகள் சிறப்பாக பங்கேற்று பயனடைந்தனர்.

இதனை தொடர்ந்து மாணவிகளின் அறிவியல் மாதிரிகள் கண்காட்சியில் காட்சிபடுத்தப்பட்டன. முடிவில் வேதியியல் துறை தலைவர் ஷோபா நன்றி கூறினார்.

வியாழன், மார்ச் 2, 2023.

இந்து தமிழ் திசை




வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் தேசிய அறிவியல் தினம் மற்றும் அறிவியல் கண்காட்சி நடைபெற்றன.

# அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் அறிவியல் கண்காட்சி

**திருவண்ணாமலை**

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் தேசிய அறிவியல் தினம் மற்றும் அறிவியல் கண்காட்சி நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் முனைவர் ருக்மணி தலைமை வகித்தார். கல்லூரி நிறுவனர் முனிரத்தினம், செயலாளர் ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இயற்பியல் துறைத் தலைவர் செல்வகுமார் வரவேற்றார். தமிழ்நாடு அறிவியல் இயக்க சங்க செயலாளர் கோபால் பார்த்தசாரதி, தேசிய அறிவியல் தினத்தின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். 360 நிறுவன குழுமங்களின் தலைவர் முனைவர் நரேஷ் குமார், ட்ரோனை பறக்க விட்டு செயல்முறை விளக்கமளித்தார்.

மேலும் தண்ணீரின் அதிசயங்கள் மற்றும் அறிவியல் இன்றியமையாமை குறித்து எடுத்துரைக்கப்பட்டன. மாணவிகளின் அறிவியல் மாதிரி படைப்புகள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டன. முடிவில், வேதியியல் துறைத் தலைவர் ஷோபா நன்றி கூறினார்.

தினத்தந்தி

9-3-2023



வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில்

# உலக மகளிர் தின விழா

வந்தவாசி, மார்ச்.9-

வந்தவாசியில் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் உலக மகளிர் தின விழா நடைபெற்றது. கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி தலைமை தாங்கினார். கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம், கல்லூரி செயலர் எம்.ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் எம். ஞானமலர் வரவேற்றார்.

திருவண்ணாமலை மாவட்ட ஊழல் தடுப்பு பிரிவு துணை போலீஸ் சூப்பிரண்டு எஸ்.வேல்முருகன், மருத்துவர் சந்திரிகா ராஜராஜன் ஆகியோர் கலந்துகொண்டு, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி பேசினர். முடிவில் கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியை ஏ.கலைவாணி நன்றி கூறினார்.

தினமணி

வியாழக்கிழமை, 9 மார்ச் 2023

**திருவண்ணாமலை/வந்தவாசி/ஆரணி, மார்ச் 8:** திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கல்வி நிறுவனங்களில் மகளிர் தின விழா புதன்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற மகளிர் தின விழாவுக்கு கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி தலைமை வகித்தார். நிறுவனர் பி.முனிரத்தினம், கல்லூரிச் செயலர் எம்.ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்த் துறைத் தலைவர் எம்.ஞானமலர் வரவேற்றார்.

மாவட்ட ஊழல் தடுப்புப் பிரிவு டிஎஸ்பி எஸ்.வேல்முருகன், மருத்துவர் சந்திரிகா ராஜராஜன் ஆகியோர் பேசினர்.

மேலும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு அவர்கள் பரிசுகளை வழங்கினர். கல்லூரி தமிழ்த் துறை பேராசிரியை ஏ.கலைவாணி நன்றி கூறினார்.

தினமலர்

9.3.2023




வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடந்த உலக மகளிர் தின விழாவில் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு பிரிவு டிஎஸ்பி வேல்முருகன் பேசினார். உடன் கல்லூரி செயலாளர் ரமணன், கல்லூரி முதல்வர் ருக்மணி ஆகியோர்.

வந்தவாசி

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி வளாகத்தில் சர்வதேச மகளிர் தின விழா நேற்று கொண்டாடப்பட்டது.

விழாவுக்கு கல்லூரி முதல்வர் ருக்மணி தலைமை வகித்தார். கல்லூரி நிறுவனர் முனிரத்தினம், கல்லூரி செயலாளர் ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்த்துறை தலைவர் ஞானமலர் வரவேற்றார். மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு டிஎஸ்பி வேல்முருகன், வந்தவாசி தாமரை மருத்துவமனை டாக்டர் சந்திரிகா ஆகியோர் பேசினர்

பின்னர் கல்லூரி மாணவிகளுக்கிடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

தமிழ்துறை உதவிபேராசிரியர் கலைவாணி நன்றி கூறினார்.

தினமணி

சனிக்கிழமை, 11 மார்ச் 2023

# சட்ட விழிப்புணர்வு முகாம்

**வந்தவாசி, மார்ச் 10:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் சட்ட விழிப்புணர்வு முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

முகாமுக்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி, கல்லூரிச் செயலர் எம்.ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி நாட்டு நலப் பணித் திட்ட அலுவலர் ஏ.கலைவாணி வரவேற்றார்.

வந்தவாசி செஞ்சிலுவை சங்கச் செயலர் பி.சீனிவாசன் மகளிர் மேம்பாடு குறித்து பேசினார். மகளிர் பாதுகாப்புக்கான சட்டங்கள் குறித்து வழக்குரைஞர்கள் ஆர்.மணி, கே.அன்பரசு ஆகியோர் பேசினர். கல்லூரி கணினி பயன்பாட்டியல் துறை பேராசிரியை எஸ்.சாய் குமாரி நன்றி கூறினார்.

தினத்தந்தி

9-3-2023




வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில்

# உலக மகளிர் தின விழா

வந்தவாசி, மார்ச்.9-

வந்தவாசியில் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் உலக மகளிர் தின விழா நடைபெற்றது. கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி தலைமை தாங்கினார். கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம், கல்லூரி செயலர் எம்.ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் எம். ஞானமலர் வரவேற்றார்.

திருவண்ணாமலை மாவட்ட ஊழல் தடுப்பு பிரிவு துணை போலீஸ் சூப்பிரண்டு எஸ்.வேல்முருகன், மருத்துவர் சந்திரிகா ராஜராஜன் ஆகியோர் கலந்துகொண்டு, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி பேசினர். முடிவில் கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியை ஏ.கலைவாணி நன்றி கூறினார்.

தின செய்தி | வெள்ளி, மார்ச் 10, 2023

## வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில்

# சர்வதேச மகளிர் தின விழா



■ திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் சர்வதேச மகளிர் தினவிழா கல்லூரி முதல்வர் ருக்மணி தலைமை யில் நடைபெற்றபோது எடுத்தபடம். அருகில் கல்லூரி நிறுவனர் முனிரத்தினம், கல்லூரி செயலர் வி.ரமணன், தமிழ்த்துறை தலைவர் ஞானமலர் ஆகியோர் உள்ளனர்.

வந்தவாசி மார்ச் 10-

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் புதன்கிழமை அன்று சர்வதேச மகளிர் தின விழா கொண்டாடப்பட்டது. விழாவுக்கு கல்லூரி முதல்வர் ருக்மணி தலைமை தாங்கினார். கல்லூரி நிறுவனர் முனிரத்தினம் கல்லூரி செயலர் வி.ரமணன் ஆகியோர் முன்னிலை வகிக்க தமிழ்த்துறை தலைவர் ஞானமலர் அனைவரையும் வரவேற்றார். திருவண்ணாமலை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் இலஞ்ச ஒழிப்பு பிரிவு காவல் துறை கண்காணிப்பாளர் வேல்முருகன், வந்தவாசி தாமரை மருத்துவமனையின் மருத்துவர் சந்திரிகா சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு மகளிர் தின சிறப்பு குறித்து கருத்துரை வழங்கினர். மேலும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன. முடிவில் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் ஏ.கலைவாணி நன்றி கூறினார்.

தினமணி

செவ்வாய்க்கிழமை, 14 மார்ச் 2023

# கல்லூரி வேதியியல் துறை மாணவிகளுக்கு சிறப்பு பயிற்சி

**வந்தவாசி, மார்ச் 13:** வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் வேதியியல் துறை மாணவிகளுக்கு வேதியியல் ஆய்வகப் பொருள்கள் செய்வது குறித்த 4 தின பயிற்சி திங்கள்கிழமை தொடங்கியது.

வேதியியல் துறை சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி தலைமை வகித்தார். கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் பயிற்சியை தொடங்கி வைத்தார். வேதியியல் துறைத் தலைவர் அ.ஷோபா வரவேற்றார்.

சென்னை சாய்பாபா அறிவியல் கண்ணாடிகள் நிறுவனத்தின் உரிமையாளர் வி.ராதாகிருஷ்ணன், சென்னை இந்தியன் சொசைட்டி ஆப் சயின்டிபிக் கிளாஸ் நிறுவனத் தலைவர் சி.மாதேஸ்வரன் ஆகியோர், கண்ணாடியிலான அழகு சாதனப் பொருள்கள், வேதியியல் ஆய்வகப் பொருள்கள் செய்வது எப்படி என்பது குறித்து மாணவிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

இந்து தமிழ் திசை

சனி, மார்ச் 11, 2023




வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் சட்ட விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

# சட்ட விழிப்புணர்வு முகாம்

**திருவண்ணாமலை**

உலக மகளிர் தினத்தையொட்டி சட்ட விழிப்புணர்வு முகாம் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் ருக்மணி தலைமை வகித்தார். நிறுவனர் முனிரத்தினம், செயலாளர் ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்த்துறை உதவி பேராசிரியர் கலைவாணி வரவேற்றார். வந்தவாசி செஞ்சிலுவை சங்க செயலாளர் சீனுவாசன் சிறப்புரையாற்றினார்.

வழக்கறிஞர்கள் அன்பரசு, மணி ஆகியோர் சட்ட விழிப்புணர்வு மற்றும் மகளிர் மேம்பாடு குறித்து பேசினர். முடிவில், கணினி பயன்பாட்டியியல் துறை உதவி பேராசிரியர் சாய்குமாரி நன்றி கூறினார்.

இந்து தமிழ் திசை

திங்கள், மார்ச் 20, 2023




வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் தேசிய அளவிலான இயந்திர கற்றல் கருத்தரங்கம் நடைபெற்றது.

## ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி கல்லூரியில்

# இயந்திர கற்றல் கருத்தரங்கம்

திருவண்ணாமலை

வந்தவாசி ஸ்ரீஅகிலாண் டேஸ்வரி மகளிர் கல்லூரியில் தேசிய அளவிலான இயந்திர கற்றல் கருத்தரங்கம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கல்லூரி நிறுவனர் முனி ரத்தினம், செயலாளர் ரமணன் ஆகியோர் தலைமை வகித்தனர். கல்லூரி முதல்வர் ருக்மணி முன்னிலை வகித்தார். கணினி பயன்பாட்டு துறைத் தலைவர் ராஜசெல்வி வரவேற்றார். பெங் களூரு மவுன்ட் கார்மல் கல்லூரி உதவி பேராசிரியர் பீட்டர் ஜோஸ், இயந்திர கற்றல் மற்றும் தரவு அமைப்பு குறித்து எடுத்துரைத்தார். கணினி பயன்பாட்டியல் துறை உதவி பேராசிரியர் ரம்யா நன்றி கூறினார்.

தினமணி
வியாழக்கிழமை, 23 மார்ச் 2023

# நாட்டு நலப் பணித் திட்ட முகாம் நிறைவு

**வந்தவாசி, மார்ச் 22:** வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி நாட்டு நலப் பணித் திட்டம் அலகு-2இன் கீழ் பெரும்பாக்கம் கிராமத்தில் நடைபெற்று வந்த சிறப்பு முகாம் நிறைவடைந்தது.

அந்தக் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிறைவு விழாவுக்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி, செயலர் எம்.ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் டி.பாரதி முகாம் அறிக்கை வாசித்தார். தெள்ளார் வட்டாரக் கல்வி அலுவலர் தே.ரங்கநாதன் பங்கேற்றுப் பேசினார். பள்ளித் தலைமை ஆசிரியர் ஜி.ஸ்ரீதர் மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட மாணவிகள் பங்கேற்றனர். கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் ஏ.கலைவாணி நன்றி கூறினார்.




நாட்டு நலப் பணித் திட்ட முகாம் நிறைவு விழாவில் பேசுகிறார் தெள்ளார் வட்டாரக் கல்வி அலுவலர் தே.ரங்கநாதன்.

தினமலர்

22.3.2023

# நாட்டு நலப்பணி திட்ட முகாமில் பெண்களுக்கான சட்ட விழிப்புணர்வு



வந்தவாசி அடுத்த பெரும்பாக்கம் கிராமத்தில் ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி மாணவிகள் நடத்திய என்எஸ்எஸ் முகாமின்போது ஆபத்தான நிலையில் தற்காத்து கொள்வது எப்படி என, தீயணைப்பு துறையினர் செயல் விளக்கம் செய்து காட்டினர்.

**வந்தவாசி, மார்ச் 22–**

வந்தவாசி அடுத்த தென்கரை மற்றும் பெரும்பாக்கம் கிராமங்களில் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி என்எஸ்எஸ் மாணவிகள் ஐந்து நாள் சிறப்பு முகாம் நடத்தினர்.

முகாமிற்கு கல்லூரி நிறுவனர் முனிரத்தினம் தலைமை வகித்தார். கல்லூரி செயலாளர் ரமணன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் ருக்மணி வரவேற்றார். திருவள்ளுவர் பல்கலைக்கழக என்எஸ்எஸ் ஒருங்கிணைப்பாளர் ரவிச்சந்திரன் தொடங்கி வைத்து பேசினார்.

முகாமில் கலந்து கொண்ட கல்லூரி மாணவிகள் கிராமங்களில் உள்ள கோயில்கள், தெருக்கள் ஆகியவற்றை சுத்தம் செய்து தூய்மையாக வைத்துக் கொள்ளும்படி பொது மக்களை கேட்டுக் கொண்டனர்.

முகாமில் பெண்களுக்கான சட்ட விழிப்புணர்வு குறித்து வக்கீல் மணி பேசினார். குடிநீரை சுத்திகரிக்கும் முறை குறித்து வேதியியல் துறை தலைவி சோபா விளக்கினார். பேரிடர் காலத்தில் தற்காத்து கொள்வது எப்படி என தீயணைப்பு துறையினர் செயல் விளக்கம் செய்து காட்டினர்.

மேலும் தொழில் முனைவோருக்கான பயிற்சி வகுப்பில் பினாயில், மூலிகை நுரைப்பான், மூலிகை கொசுவத்தி ஆகியவை தயாரிப்பு குறித்து பெண்கள் மேம்பாடு நுகர்வோர் உரிமைகள் குறித்தும், உணவு முக்கியத்துவம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதில் தெள்ளாறு வட்டார கல்வி அலுவலர் ரங்கநாதன், தென்கரை பஞ். தலைவர் கீதா, வருவாய் ஆய்வாளர் செந்தில்நாதன், தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் ஸ்ரீதர், வளர்மதி உள்பட பலர் கலந்து கொண்டனர். என்எஸ்எஸ் அலுவலர் கலைவாணி நன்றி கூறினார்.

வெள்ளி,
மார்ச் 24,2023 | தினச்செய்தி

## வந்தவாசி

# ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரிக்கு கல்வி பங்குதாரர் சிறந்த விருது



வந்தவாசி மார்ச்.24-
ஐசிடி அகாடமி மத்திய அரசு, தமிழக அரசு மற்றும் தொழில் துறையின் கூட்டு முயற்சியால் உருவாக்கப் பட்ட ஓர் அமைப்பாகும். ஐசிடி அகாடமி ஒரு சுயாட்சி உரிமையுள்ள, இலாபத்தைக் கருதிச் செயல்படாத நிறுவன மாகும். இது பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சியில் தகவல் தொழில்நுட்பத்தில் அடுத்த தலைமுறை உயர் கல்வி ஆசியர்களுக்கும், மாணவர்களுக்கும் பயிற்சி அளித்து, அதன் மூலம் மாணவர்களைத் தொழில் துறைக்கான தகுதி பெறச் செய்யும் நோக்கில் ஏற்படுத் தப்பட்ட ஒரு முன்னோடி நிறுவனமாகும்.

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் 50 வது பதிவாக உயர் தாக்கம் தொழில் நிறுவனம் தொடர்பு நிகழ்வு டிரில்லியன் டாலர் டிஜிட்டல் பொருளாதாரத் திற்கான மனித மூலதனத்தை உருவாக்குதல் எனும் கருப்பொ ருளில், சென்னை, வர்த்தக மையம், நந்தம்பாக்கத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வை, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கிவைத்தார். இதில் தமிழக தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில் துறை அமைச்சர் மனோதங்கராஜ், சிறு மற்றும் குறுந்தொழில் பிரிவு அமைச்சர் அன்பர சன், தொழிலாளர் நலம் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் கணேசன், துணைத்தலைவரும், மாநில திட்டக்குழு உறுப்பினருமான முனைவர் ஜெ.ஜெயராமன், தகவல் மற்றும் தகவல் தொடர் புத் தொழில்நுட்ப ஆட்சிமன் றக்குழுவின் செயலர் ஜெ. குமரகுருபரன், சென்னை மேயர் பிரியாரஞ்சன், ஐசிடி அகாடமியின் தலைவர் ஜோஸ் பவுல்கர், முதன்மை அதிகாரி ஹரிபாலசந்திரன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதில் 400 பொறியியல் கல்லூரிகளும், 300 கலை மற்றும் அறிவியல் கல்லூ ரிகளும் பங்கு பெற்றன. இந்த மாநாட்டில் வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியின் நிறுவ னர் பா. முனிரத்தினம், செயலர் மு.ரமணன், கல் லூரி முதல்வர் சி.ருக்மணி, ஐசிடி அகாடமியின் நிகழ்வு ஒருங்கிணைப்பாளர் கே. வான்மதிசெல்வி, கல்லூரியின் அனைத்து துறைகளிலிருந்தும் பத்து பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

கல்வி பங்குதாரர் சிறந்த விருது

இந்த நிகழ்ச்சியில் வந்த வாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரிக்கு கல்வி பங்குதாரர் சிறந்த விருது வழங்கப்பட்டது. சிறந்த ஒருங்கிணைப்பாளர் விருது கே.வான்மதிசெல்விக்கு வழங்கப்பட்டது.

தமிழக தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் இந்த மிகச்சி றப்புவாய்ந்த விருதினை ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மக ளிர் கல்லூரியின் நிறுவனர் பா.முனிரத்தினம், செயலர் மு.ரமணன் ஆகியேரிடம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்து தமிழ் திசை

ஞாயிறு, மார்ச் 26, 2023

# வந்தவாசியில் விழிப்புணர்வு ஊர்வலம்

**திருவண்ணாமலை**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, போதைப் பொருள் தடுப்பு மற்றும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ஊர்வலம் வந்தவாசியில் நேற்று நடைபெற்றது.

வந்தவாசி மலைநகர லயன்ஸ் சங்கம், வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி லியோ சங்கம், வந்தவாசி ஆர்.சி.எம். உயர்நிலைப் பள்ளி சார்பில் விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. மலைநகர லயன்ஸ் சங்கத் தலைவர் எ.சபரிராஜ் தலைமை வகித்தார். செயலாளர் வி.ரமேஷ்பாபு, பள்ளி தலைமை ஆசிரியர் வி.எல்.ராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழிப்புணர்வு ஊர்வலத்தை வந்தவாசி வட்டாட்சியர் கே.ராஜேந்திரன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். பள்ளி வளாகத்திலிருந்து புறப்பட்ட ஊர்வலம் கோட்டை மூலை, பஜார் வீதி, தேரடி வழியாக சென்று காந்தி சாலையில் நிறைவடைந்தது. அப்போது, சாலை பாதுகாப்பு குறித்து வந்தவாசி ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் வி.முருகானந்தம், போதைப் பொருள் தடுப்பு குறித்து வந்தவாசி வட்டார மருத்துவ அலுவலர் எம்.ஆர். ஆனந்தன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து லயன்ஸ் சங்க முன்னாள் மாவட்ட ஆளுநர் வி.எஸ்.தளபதி ஆகியோர் பேசினர். முடிவில், மலைநகர லயன்ஸ் சங்க பொருளாளர் சி.சின்னராஜன் நன்றி தெரிவித்தார்.



↑ வந்தவாசியில் போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு ஊர்வலத்தை கொடியசைத்து தொடங்கி வைத்த வந்தவாசி வட்டாட்சியர் கே.ராஜேந்திரன்.

செவ்வாய்க்கிழமை
28 மார்ச் 2023

# தொழில்முனைவோர் விழிப்புணர்வுக் கருத்தரங்கம்



வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தொழில்முனைவோர் விழிப்புணர்வுக் கருத்தரங்கில் பங்கேற்ற சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்டோர்.

**வந்தவாசி, மார்ச் 27:** வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் தொழில்முனைவோர் விழிப்புணர்வுக் கருத்தரங்கம் சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் எஸ்.ருக்மணி தலைமை வைத்தார். கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம், கல்லூரிச் செயலர் எம்.ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி நுண்ணுயிரியல் துறைப் பேராசிரியை கே.வான்மதி செல்வி வரவேற்றார்.

மாணவிகளுக்கான தொழில் முனைவோர் வாய்ப்புகள் குறித்து வேலூர் திருவள்ளுவர் பல்கலைக் கழக தொழில்முனைவோர் மேம்பாட்டு மைய ஒருங்கிணைப்பாளர் எ.ராஜசேகர் பேசினார். தொழில் தொடங்கும் முறைகள், திறன் மேம்பாடு ஆகியவை குறித்து வந்தவாசி ஏஎஸ்ஏ இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தைச் சேர்ந்த ஏ.எஸ்.ஏ.செல்வராஜ் மாணவிகளுக்கு விளக்கினார். கல்லூரி இயற்பியல் துறைத் தலைவர் எஸ்.செல்வகுமார் நன்றி கூறினார்.

தினத்தந்தி

28–3–2023



வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில்

# தொழில் முனைவோருக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு

வந்தவாசி, மார்ச்.28-
வந்தவாசியில் அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் தொழில் முனைவோருக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு கல்லூரி முதல்வர் ருக்மணி தலைமையில் நடைபெற்றது. கல்லூரி நிறுவனர் முனிரத்தினம், கல்லூரி செயலர் ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் திருவள்ளுவர் பல்கலைக்கழக தொழில் முனைவோருக்கான மேம்பாட்டு மையத்தின் ஒருங்கிணைப்பாளர் ஏ.ராஜசேகர் கலந்து கொண்டு மாணவிகளுக்கு தொழில் முனைவோருக்கான வாய்ப்புகள் பற்றியும் திறன் மேம்பாடு பற்றியும் விளக்கி கூறினார்.

மேலும் வந்தவாசி இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தை சேர்ந்த செல்வராஜ் மாணவிகளுக்கு தொழில் தொடங்கும் முறைகள் மற்றும் தொழில் முனைவோருக்கான திறன் மேம்பாடு பற்றி எடுத்துரைத்தார்.

மேலும் கருத்தரங்கில் கலந்து கொண்ட மாணவிகளுடன் கலந்துரையாடி சிறப்பாக பங்கு பெற்ற மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்டது. முன்னதாக நுண்ணுயிரியல் துறை உதவி பேராசிரியர் வான்மதி செல்வி வரவேற்றார். முடிவில் கணிதத்துறை உதவிப்பேராசிரியர் ஷேக் தாவுத் நன்றி கூறினார்.

இந்து தமிழ் திசை

சனி, ஏப்ரல் 22, 2023




வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் ஒரு மாணவிக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

## ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி கல்லூரியில்

# வேலைவாய்ப்பு முகாம்

**திருவண்ணாமலை**

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் வளாக வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இதற்கு, கல்லூரி நிறுவனர் முனிரத்தினம், கல்லூரி செயலாளர் ரமணன் ஆகியோர் தலைமை தாங்கினர்.

கல்லூரி முதல்வர் ருக்மணி முன்னிலை வகித்தார். கல்லூரி வேலைவாய்ப்பு அலுவலர் வான்மதி செல்வி வரவேற்றார். முகாமில் சென்னை மறைமலை நகரில் உள்ள யாசக்கி நிறுவனத்துக்காக ஆள்தேர்வு நடைபெற்றது.

இதில், கல்லூரி இறுதி யாண்டு மாணவிகள் 169 பேரும், முன்னாள் மாணவிகள் 7 பேரும் பங்கேற்றதில் 126 பேர் தேர்வாகி பணி நியமன ஆணைகளை பெற்றனர். முடிவில், உதவி பேராசிரியை நிர்மலாதேவி நன்றி தெரிவித்தார்.